மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற அந்தக் கேள்விக்கு எந்தவிதமான ஆதாரமும் இந்த அரசிடம் இல்லை. முன்னாலே இருந்த அரசு இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நாடெங்கும் ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பியது. இப்போது அது மாற்றுத் திட்டமாக பரிசீலனையில் இருந்து வருகிறது என்று மட்டும்தான் இந்த அரசிடம் தகவல் இருக்கிறது.

வசிஷ்டர் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 975—திரு. இரா. திருமான் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏற்காடு சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் பேளூர் வசிஷ்டர் நதியின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் எப்போது ஆரம்பமாகும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பேளூர் வசிஷ்டர் நதியின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் ரூ. 14.00 இலட்சம் செலவில் செயல்படுத்த 1981–82 ஆம் ஆண்டு இரண்டாம் பாகத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது, அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டதும் வேலை துவங்கப்படும்.

திரு. இரா. திருமான் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தினை இந்த ஆண்டே கட்டி முடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும்.

மதுரை—சாத்தூர் இணைப்புச் சாலை.

* வினா எண் 976—திரு. மு. சுந்தரராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் நகராட்சியினரால் ஆரம்பிக்கப்பட்ட மதுரை—சாத்தூர் இணைப்புச் சாலை (காமராஜ் பைபாஸ் ரோடு) முடிவடையாமல் இருப்பதன் காரணம் என்ன?

1981 [மே 5]

(ஆ) அத் திட்டம் நிறைவேற அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ? அதில் எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மதுரை—சாத்தூர் இணைப்புச் சாலை போடுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன் வராததே தாமதத்திற்குக் காரணம்.

(ஆ) இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு ரூ. 1,79,150 கடனாக நகராட்சிக்குக் கொடுத்துள்ளது. திட்டம் முழுவதுமாக 1982—83-க்குள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 2,63,650. இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 1,41,650.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஒப்பந்தக்காரர்கள் கிடைக்காத காரணத்தால் அந்த வேலையில் தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னதாக நினைக்கிறேன். ஒப்பந்தக்காரர்கள் ஏன் வருவதற்கு மறுக்கிறார்கள்? நீண்ட நாட்களாகவே வேலை ஆரம்பிக்கப்பட்டும் நிறைவு பெறாமல் இருப்பதால் விருதுநகருக்குள்ளே போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடிய வாய்ப்பும் இருப்பதால் அரசு முனைந்து அந்தப் பணியைச் செய்து முடிப்பதற்கு என்ன ஏற்பாடுகளை செய்ய இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒப்பந்தக்காரர்களுக்கு அதிகமான லாபம் கிடைப்பதில்லை. அதன் காரணமாகத்தான் பலர் பணிகளைச் செய்வதற்கு முன்வருவதில்லை. மேலும் தற்போது பொருட்களின் விலை அடிக்கடி ஏறிக்கொண்டிருப்பதால் அதற்கு ஏற்ற முறையிலே ஒப்பந்தக்காரர்களுக்கு அரசாங்கமும் பணம் கொடுத்தால்தான் வருகிறார்கள். இல்லை என்றால் வருவதில்லை. ஆகவேதான் இந்த நிலை. ஆனாலும் இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

காவேரிப்பட்டணம் பேரூராட்சியின் வருமானம்.

* வினா எண் 977—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டணம் தேர்வுநிலைப் பேரூராட்சியின் வருமானம் நிர்வாகச் செலவிற்கே போதுமானதாக இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா ?